## CROSS EXAMINATION OF WITNESS
## (CHAPTER XXII Code of Criminal Procedure)

## IN THE COURT OF SPECIAL JUDGE FOR THE CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT 1988, CHENNAI-104

**Dated.25.02.2020**
**C.C.No.1/2016**
**Tr. - A.Vellaichami (PW5)**

மனுவின் பெயரில் அ.சா.5 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பெயரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பதிவுத்துறையில் சுமார் 29 ஆண்டுகள் பணியாற்றி வந்து 30.06.2015 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். 2015ம் வருடம் நான் பதிவு துறை பயிற்சி நிலையத்தில் விரிவுரையாளராக பணியாற்றி வந்தேன். மேலும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் மாவட்ட பதிவாளர் நிர்வாகம் ஆக கூடுதலில் பொறுப்பில் பணிபுரிந்தேன். மேற்படி அலுவலகம் ராயப்பேட்டை பாரதி சாலையில் இயங்கி வந்தது. மேற்படி அலுவலகமானது திருவல்லிக்கேணி சார்பதிவாளர் ஆளுமைக்குட்பட்ட அலுவலகமாகும். மேற்படி கட்டிடத்தில் தரைதளத்தில் இயங்கி வந்தது. என்னுடைய அலுவலகம் இரண்டாவது மாடியில் இயங்கி வந்தது. திருவல்லிக்கேணி சார்பதிவாளர் அலுவலகம் மத்திய சென்னை மாவட்ட பதிவாளர் நிர்வாகம் அவர்கள் ஆளுமைக்குட்பட்ட அலுவலகமாகும். மேற்படி பதவியில் நான் இருந்ததால் என்னுடைய நிர்வாகத்தின் கீழ் திருவல்லிக்கேணியில் உள்ள சார்பதிவகம் இயங்கி வந்தது. நான் எதிரியின் வருகை பதிவேடு மற்றும் பொது மக்கள் கொடுத்த திருமண பதிவுக்கான விண்ணப்பத்தின் ஆவணத்தின் நகலை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை ஆய்வாளர் கேட்டதாக என்னுடைய மேலாளர் ஜான்சிபாய் கேட்டார். நானும் மேற்படி ஆவணம் அன்றாட அலுவலகப்பணிக்கு தேவை என்பதால் நகல் எடுத்து சான்றொப்பம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது.

சான்றொப்பம் அளித்தது நான் தான். எனக்கு நேரடியாக ஆய்வாளர் அவர்கள் எந்த கடிதமும் தொலைபேசியிலோ மேற்படி ஆவணங்கள் கோரி கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். அன்றைய தேதியிலேயே ஆவணங்கள் கோரப்பட்டதால் கோரிக்கை தேவையில்லை வேறு நாளில் கேட்டிருந்தால் கோரிக்கை தேவை. தரைதளத்தில் என்ன நடைபெற்றது என்று எனக்கு கூறினார்கள். ஆனால் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது.